2012 மார்ச் 28]

பகுதியில் தூர்வாரி எங்களுக்கெல்லாம் அருமையாக நீர்வரத்து வழங்க அம்மா அவர்கள் ஆணையிடுவார்கள் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு கால்வாய்களெல்லாம் தூர்வாரப்படாமல் அலைக்கழிந்து இருக்கின்றன. அவை சரி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கால்நடை சுகாதார நிலையம்

***6327—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, கே. எட்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்மா என்றாலே அன்புதான் என்று அனைவருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டு மக்களின்மீது மட்டுமல்ல;

கால்நடைகளின்மீதும் அன்பு வைத்து இதுவரையில் இல்லாத அளவிற்கு எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறைக்கு 814.3 கோடி ரூபாய் ஒதுக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊத்தங்கரை தொகுதி, கே. எட்டிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளதா என்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைக் கிளை நிலையம் புதிதாக அமைக்க, இரண்டு விதிமுறைகள் உள்ளன. மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு எந்தக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது; 3,000 கால்நடைகளுக்கு மேலாக இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. அந்த அடிப்படையிலே உறுப்பினருடைய தொகுதி கே. எட்டிப்பட்டி கிராமம் அந்த விதிகளுக்கு உட்பட்டிருப்பதால், கே. எட்டிப்பட்டி கிராமத்திற்குக் கிளை நிலையம் அமைக்க அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம்.

முற்பகல் 10–45

திருமதி மனோரஞ்சிதம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அனுதினமும் வணங்கும் என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி கே. எட்டிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகரத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம்

2012 மார்ச் 28]

செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அந்தக் கிளை நிலையம் பெரு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக மாற்றுவதற்குச் சில விதிமுறைகள் உள்ளன. 5,000 கால்நடைகள் அந்தக் கிளை நிலையத்திற்கு வரவேண்டும்; 5 கி.மீ. சுற்றளவுக்கு வேறு எந்தக் கிளை நிலையமும் இருக்கக்கூடாது என்ற விதிமுறை இருக்கிறது. அதற்கு உட்பட்டிருந்தால், நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆரணி தொகுதிக்குட்பட்ட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது, ஊத்தங்கரை தொகுதி கே. எட்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்த கேள்வி. இதுகுறித்து நீங்கள் கேளுங்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: தச்சூரிலே ஒரு கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் அமைப்பதற்கு அரசிடம் பரிசீலனை ஏதும் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை. தனிக் கேள்வி கேட்கவும்.

அடுத்து, வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.